# என் தெய்வமே என்னை மீட்க வாருமே

என் தெய்வமே என்னை மீட்க வாருமே
உன் திருப்பாதையில் நான் செல்லும் நேரமே அன்பின் பூக்களை எந்தன்
வாழ்வினில் மலர்ந்திடச் செய்யுமே

**1**
கவலையினால் வரும் சோகம் - உன்
பார்வையில் மகிழ்வாய் மாறும்
அலை அலையாய் வரும் ஏக்கம் - உன்
நினைவால் பனியாய் உருகும்
தேவனே உன் வார்த்தையில்
நிலைத்திட வரம் தருவாய்
கானமே என் ஜீவனில் கலந்து
உன் புகழ் பாடும் யேசுவே என் வசந்தமே
அணைத்திட வாருமே

**2**
பாதத்தில் அமர்ந்திடும் நேரம் - என்
ஆன்மா உன்னிடம் பேசும்
உணர்வினால் எழுந்திடும் பாசம் - என்
வாழ்வினில் இதழாய் தொடரும்
தேவனே உன் பாதையில்
நடந்திடக் கரம் பிடிப்பாய்
கானமே என் ஜீவனில் கலந்து
உன் புகழ் பாடும்
தேவனே என் நண்பனே மலர்ந்திட வாருமே